5. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திற்கு போலியோ சொட்டு மருந்துகள் விநியோகிப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். திருவாளர்கள் இ. முத்துராமலிங்கம், எஸ்.என். இராமசாமி, ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இ. முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ தடுப்பு மருந்து கிடைக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

போலியோ சொட்டு மருந்துகள் வழங்குவது பம்பாய் மாநகரத்திலுள்ள ஹாப்கின்ஸ் நிறுவனத்தில் இந்த சொட்டு மருந்தின் உற்பத்தியை பொறுத்தது. இந்த நிறுவனந்தான் நாடு முழுவதற்குமான இந்த மருந்தின் தேவையை நிறைவு செய்கிறது. நமது தேவைக்கு குறைவான அளவிலேயே இம்மருந்து வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த நோய் எந்த அளவுக்கு பரவுகிறது என்ற அடிப்படையில் கணக்கெடுத்து இம்மருந்து உடனடியாக பல மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1980–81ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 3.88 இலட்சம் டோஸஸ் (D ze) போலியோ சொட்டு மருந்துகள் வழங்கப்பட்டது. இதை மூன்று தவணைகளாக பிரித்து குழந்தைகளுக்கு கொடுத்தால் 1.3 இலட்சம் குழந்தைகளுக்கு அளிக்க இயலும்.

1981-82-ம் ஆண்டில் 3 இலட்சம் குழந்தைகளுக்கு அளிக்கும் வகையில் 8·9 லட்சம் டோஸ் மருந்துகள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. ஓராண்டில் தமிழ்நாட்டின் தேவை 50 இலட்சம் டோஸ் மருந்தாக இருப்பினும் நமக்கு 9 இலட்சம் டோஸ் மருந்துதான் வழங்கப்படுகிறது. இதிலிருந்து நமது தேவைக்கு மிகவும் குறைந்த அளவிலேயே இம்மருந்து வழங்கப்படுவது தெளிவாகும்.

1982 மார்ச் 2] [டாக்டர் எச். வி. ஹண்டே]

1981-82ம் ஆண்டு நம் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட 8·9 இலட்சம் டோஸ் மருந்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு 4000 டோஸ் மருந்து வழங்கப்பட்டது. அரசால் வழங்கப்படும் மருந்தைத் தவிர தனியார் மருத்துவ நிறுவனங்களும், தனியாக சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களும் இம்மருந்தை வாங்குகிறார்கள். இந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் இவ்வாண்டு தனியாக சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், தனியார் மருத்துவ நிறுவனங்கள் அரசு மருத்துவ நிலையங்களுக்கும் 40,000 டோஸ் மருந்து வழங்கப்பட்டது. அரசால் வழங்கப்பட்ட 4000 டோஸ் மருந்து நீங்கலாக இந்த 4,00,000 டோஸ் மருந்தும் தமிழ்நாடு தாதா நிறுவனம் மற்றும் ஸ்பென்ஸர் நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டது. தாதா நிறுவனமும் தன்னுடைய தேவைக்கு பம்பாய் மாநகரத்திலுள்ள ஹாப்கின்ஸ் நிறுவனத்தையே நம்பி உள்ளது இந்த நிறுவனத்தில் இந்த மருந்து உற்பத்தி தேவைக்கு தகுந்தாற் போல் இல்லை. ஆயினும், அரசும், தமிழ்நாடு தாதா நிறுவனமும் அவசரத்தின் அடிப்படையிலும் இந்த மருந்தின் கையிருப்பை பொறுத்தும், திருநெல்வேலி மாவட்டத்துக்குஇம்மருந்தை வழங்குகிறது. 27-2-1982 அன்று 20,000 டோஸ் கொண்ட 1000 குப்பிகள் (Vials) திருநெல்வேலி உட்பட தென் மாவட்டங்களின் உபயோகத்திற்காக மதுரைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் நமது தேவைக்குக் குறைவாகவே கிடைக்கிறது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். போலியோ நோய் குழந்தைகளுக்கு வந்தால், அவர்களின் எதிர் காலமே இருண்டு போய்விடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிற இதனை அரசு மனதில் கொண்டு வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இதனை இறக்குமதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்கு முன்பாக ரோட்டரி நிறுவனத்தின் மூலமாக, இதைப்பற்றி நாம் அவர்களோடு தொடர்புகொண்டு பேசியிருக்கிறோம். கனடா நாட்டைப் பொறுத்தவரையிலே, 'மீஸில்ஸ் வாக்சின்' தருகிறோம்

என்று சொன்னார்கள். 'போலியோ வாக்சின்' தர முடியாது என்று சொன்னார்கள். ஒரு பிராஜக்டில்தான் ஒரு காலத்திலே கொடுக்கமுடியும் என்று சொன்னார்கள் அவர்களோடு, ஜப்பானிய ரோட்டரி கிளப்பின் முக்கியமான உறுப்பினர்களும் வந்திருந் தார்கள். அவர்கள் அனைவரோடும் அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு, ஏறத்தாழ 1 மணி நேரம் பேசினோம். அந்த 1 மணி நேர விவாதத்திற்குப் பிறகு, நம்முடைய பிரச்னையை அவர்கள் புரிந்து கொண்டு, ஏதாவதொரு மாவட்டத்திற்கு, பரீட்சார்த்த மாக, பைலட் ஸ்கீமாக அப்பகுதிக்கு முழுமையாக என்னதேவைப் படுகிறதோ, அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். என்று சொன்னார்கள். அப்படி ஒரு மாவட்டத்திற்கு அவர்கள் கொடுக்க முன்வந்தால், அந்த மாவட்டம் வட ஆற்காடு மாவட் டம் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், அங்கேதான் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி இருக்கிறது. சுலப மாகப் பராமரிக்க வசதியாக இருக்கும் என்பதாலே, அங்கே கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அப்படி கொடுத்தாலுமகூட, இன்னும் கொஞ்சம் கூடுதலாக, திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பொதுவாக, அந்த மருந்தை அங்கே திருப்பிவிட செளிசரியமாக இருக்கும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், திரு நெல்வேலி மாவட்டம் உட்பட, தென் மாவட்டங்களுக்கு 100 புட்டி போலியோ மருந்துகள் அனுப்பப்பட்டுள்ளதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ நோயினால் அதிகமான குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்திற்குத் கூடுதலாகப் போலியோ மருந்துகள் அனுப்ப அரசு ஆவன' செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சிகரமான நிலை என்னவென்றால், 1981 முழு வதும் 9 பேர்கள் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை போன்ற மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மிகவும் குறைவாக இருக்கிறது. போலியோ ஜாஸ்தியாக

1982 மார்ச் 2] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இல்லை. அப்படி இருக்கிறது என்பதற்காக நாம் சும்மா இருக்க முடியாது. எச்சரிக்கையாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே அங்கே 100 வயல் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஆனால் 27-2 1982ல் 1000 வயல்கள் அதாவது 20 ஆயிரம் டோசஸ் கொடுத்திருக்கிறோம். இதிலிருந்து கணிசமான அளவுக்குத் தொகை அந்த மாவட்டத்திற்கும் போகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் போலியோ நோயாலே குழந்தைகள் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை அமைச்சர் அவர்கள்அறிவார்கள். இந்த போலியோ சொட்டு மருந்து பம்பாயில் உள்ள 'ஹாப்கின்ஸ்' நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டு வாங்கப்படுகிறது. என்று சொன்னார்கள். அந்த மருந்தே போலியோ என்ற அளவுக்கு சந்தேகம் ஏற்படுகிறது. எனவே நாம் அந்த ஹாப்கின்ஸ் நிறுவனத்திடம் இருந்து வாங்குவதை விட்டு, நம் நாட்டிலேயே இதைத் தயாரிக்கும் செயற்குறிப்பு அல்லது ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, அடுக்கு மொழிக்காக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த ஹாப்கின்ஸ் நிறுவனம் உலகத்திலேயே மிகவும் சிறந்த நிறுவனம் ஆகும். இந்த மருந்துகள் அங்கேதான் தயாராகின்றது. அந்த நிறுவனத்தைப்பற்றி இந்த அவையில் தவறாகப் பேசினோம் என்று வந்துவிடக் கூடாது.

It is one of the the Institutes in the world உலகத்திலேயே பல பேர்கள் அங்கே வந்து கற்றுக் கொண்டு போகிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலேயே இதை ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று கேட்டார்கள். அது நியாமான கேள்வியாகும். இந்தக் கேள்வியின் அடிப்படையில் நாம் கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தில் பல்வேறு முறைகளில் விரிவுபடுத்தி வருகிறோம். இந்த பட்ஜெட்டிலே கூட அதைக் குறித்து தெரிவித்திருக்கிறோம். மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதம் வரும்போது விரிவாகப் பேசலாம். இந்த கிங் இன்ஸ்டிட்டை மேலும் விரிவு படுத்த வேண்டும் என்றும் டிரிப்பிள் ஆன்டிஜன் தயாரிப்பதை அங்கே ஆரம்பித்திருக்கிறோம். படிப்படியாகத்தான் இதை செய்ய முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் இரண்டாவது பகுதியை ஏற்றுக் கொண்டு, முதல் பகுதியை விட்டு விடுவோம்,